# பரிசுத்தமாக்கும் பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர் நமக்கு வல்லமையை கொடுக்கிறார். ஆனால் அதை பயன்படுத்த வேண்டியது, தீர்மானம் செய்ய வேண்டியது நம்முடைய கடமையாயிருக்கிறது.

❖ பரிசுத்த ஆவியானவர் செய்லபட அவருக்கு இடம் கொடுக்க வேண்டும்.

❖ நாம் பாவம் செய்யும் போதெல்லாம், ஓர் ஆசீர்வாதம் நிறைந்த தேவனுடைய கிரியை அற்பமாக பேசப்படும்போதும், தேவனுக்குரிய மகிமை செலுத்தப்படாத போது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறோம், வேதனைப்படுத்துகிறோம், அவமதிக்கிறோம் மற்றும் ஏமாற்றத்துள்ளாக்குகிறோம்.

❖ பரிசுத்தமற்ற ஒவ்வொரு காரியமும் ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது. அவ்வாறு நாம் அவரை துக்கப்படுத்தும் போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் நம்மிடமிருந்து விலகிக் கொள்கிறார். (எபேசியர் 4:30).

<u>**பரிசுத்த ஆவியானவர்:**</u>

- பாவத்தை கண்டித்து உணர்த்துகிறார். (யோவான் 16:8)
- தேவனுடைய வசனங்களை எடுத்துப் போதிக்கிறார். (யோவான் 14:26)
- ஆறுதல் அளித்து தேற்றுகிறார். (யோவான் 14:16, அப்போஸ்தலர் 9:31)
- நம்மில் வாசம் பண்ணுகிறார். (ரோமர் 8:9)
- ஆவியின் கனியைத் தருகிறார். (கலாத்தியர் 5:22)
- நாம் கற்றுக் கொண்டவற்றை எல்லாம் நினைப்பூட்டுகிறார். (யோவான் 14:26)
- நம்முடைய பலவீனத்தில் தேவனக்குக் கீழ்படியும்படி வல்லமை அளித்து நம்மை பலப்படுத்துகிறார். (ரோமர் 8:26, எசேக்கியேல் 36:27)

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- மாம்சத்தின் கிரியைகளை அழிக்கும்படி வல்லமை அருளுகிறார். (ரோமர் 8:13).
- உள்ளான மனிதனை ஆவிக்குரிய வல்லமையால் பலப்படுத்துகிறார். (எபேசியர் 3:16)
- விசுவாசிகளுக்கு நீதி, சமாதானம், சந்தோஷம், மனநிறைவு அருளுகிறார். (ரோமர் 14:17, 15:13).
- மற்றவர்களுக்கு நாம் சத்தியத்தை போதிக்கும் வல்லமையை நமக்கு அளிக்கிறார். (அப்போஸ்தலர் 1:8, 1 கொரிந்தியர் 2:1–4, 1 தெசலோனிக்கேயர் 1:5)

**<u>பரிசுத்த ஆவியானவர்:</u>**

- பழைய மனுஷனுக்கு எதிராக போராடுகிறார்.
- மாம்சத்திற்கு எதிராக போராடுகிறார்
- நமது சரீரத்தில் இருக்கிற பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கிறராகவும் இருக்கிறார்.

> பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலமாகவும், மனசாட்சி மூலமாகவும் நம்மோடு பேசும்பொழுது நாம் கீழ்படிய வேண்டும்.

- பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்களை (தூண்டுதல்களை) அவித்துப் போட வேண்டாம். (எபேசியர் 6:16)
- பரிசுத்த ஆவியானவர் மட்டுமே உங்கள் மூலமாக செயல்பட்டு தேவன் விரும்பும் ஒரு வாழ்க்கையை வாழ முடியும்.

